# ONGC PUBLIC SCHOOL
# NERAVY - KARAIKAL

## உலக தாய்மொழி தினம்

ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி மேரி கோம் மேடையில் இன்று காலை 8.40 மணி அளவில் (பிப்ரவரி 21/02/2023) உலக தாய்மொழி தினம் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கியது. இவ்விழாவிற்கு ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியின் துணை முதல்வர் திரு எட்வின் சாமுவேல் அவர்கள் முன்னிலை வகித்தார்.உலக தாய்மொழி தின விழாவில் தமிழ், ஹிந்தி, மலையாளம், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளின் சிறப்பினை மையமாகக் கொண்டு நிகழ்ச்சி நிரல்கள் இடம் பெற்றன.




விழாவின் தொடக்கமாக தாய்மொழியின் தனி சிறப்பினை எட்டாம் வகுப்பு மாணவி சிவானி (8-D) மிகச் சிறப்பாக எடுத்து இயம்பினார். இதனைத் தொடர்ந்து தமிழ் மொழியின் தனித்துவத்தை கவிதையாக ஒன்பதாம் வகுப்பு மாணவன் அர்ஜுன் (9-D) எடுத்தியம்பினான். இதனைத் தொடர்ந்து ஹிந்தி மொழியின் மகத்துவத்தை ஆறாம் வகுப்பு மாணவி (6-B) எடுத்துக் கூறினான்.

மலையாள மொழியின் சிறப்பினை மூன்றாம் வகுப்பு மாணவன் ஆசிஷ்த் தேவ் (3-B) மிக அருமையாக எடுத்துக் கூறினார்.




தெலுங்கு மொழியின் சிறப்பினை எட்டாம் வகுப்பு மாணவன் சாய் சாகித்யா (8-D) சிறப்பாக எடுத்துக் கூறினான். இதனைத் தொடர்ந்து கன்னட மொழியின் அவசியத்தை நான்காம் வகுப்பு மாணவன் கௌஷத் பீடே மிக அருமையாக எடுத்துக் கூறினான்.நிகழ்ச்சியின் இறுதியாக சமஸ்கிருத மொழியின் அவசியத்தையும் அதன் சிறப்பினையும் ஆறாம் வகுப்பு மாணவன் பிரணவ ஆச்சார்யா( 6-B) மிக நேர்த்தியான முறையில் எடுத்துக் கூறினான்.தமிழ் ஆசிரியர்களும், பிறமொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் உலக தாய்மொழி தின விழாவில் கலந்துகொண்டு சிறப்பு செய்தனர். விழாவானது தேசிய கீதத்துடன் இனிதே நிறைவடைந்தது.